# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதி விசேஷமானது

අංක 2378/57 – 2024 අප්‍රේල් මස 06 වැනි සෙනසුරාදා – 2024.04.06

*2378/57 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

2011 செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 1725/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 229 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 13/ 97/ LRB/ 599 -II.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : GCF/ ATH/KD/24/LR
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 20.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 497B, ஆசிரி உயன கிராம அலுவலர் பிரிவில், தலங்கம (கடுவெல மாநகரசபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.08.14 ஆந் திகதிய, CO/KDW/2023/195 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தை கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. A - பொலொன்கஹ கும்புர, பனாகொட கும்புர, கெட்டகொடகே கும்புர, வெட்டகெயியாபொத கும்புர, அதபத்து கும்புர, கொட்டகேலகஹ கும்புர - விஸ்தீரணம் : 0.0270 ஹெக்டயார்**

வடக்கு: கொ 9304 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 13; கிழக்கு: கொ 9304 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 13, சீ மெந்து வடிகால், இந்த வரைபடத்தில் துண்டு இல. C மற்றும் B; தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு இல. C, B மற்றும் கொ 9304 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 13; மேற்கு: கொ 9304 ஆம் ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 13.

EOG 04 - 0071

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழ் கரத்தச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2023.05.19 ஆந் திகதிய 2332/52 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க 2023.05.09 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரிசின் சார்பில் இன்றும் பொறுப்பேற்கப்பட்டவில்லை. ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2023.05.19 ஆம் திகதிய 2332/52 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க 2023.05.09 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/10/2014/LRB/198.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : WGSWD&EIP/ACQ/KB/27

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, மாச்சு 24.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், கட்டுவாவல, பொரலெஸ்கமுவ கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.06.28 ஆந் திகதிய, CO/DSO/2015/168 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தை கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. 19 - ஈரியகஹதெணிய - விஸ்தீரணம் : 0.0201 ஹெக்டயார்**

வடக்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 18, 15 மற்றும் 14; கிழக்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 14 மற்றும் 20; தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு இல. 20 மற்றும் 17; மேற்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 17, 18 மற்றும் 15.

EOG 04 - 0072

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.